**24.03.2025**

**அ.வ.எண். 113/2017**

**<u>வா.சா.1 கிருஷ்ணன் அவர்களின் குறுக்கு விசாரணை</u>**

1. என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சொத்தினை நாங்கள் பயிர் செய்து அனுபவித்து வருவதால் தாக்கல் செய்தேன். யாருக்கு எதிராக வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சுந்தரமூர்த்தி. தாவா சொத்தின் சர்வே எண்.35/1, 46/1, 293/2, 261/4, 256/9. மற்ற சர்வே எண்கள எனக்கு ஞாபகமில்லை. தாவா சொத்துகளின் மொத்த விஸ்தீரணம் 8 ஏக்கர். யார் யார் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் எம்.சி.கிருஷ்ணன், ரமேஷ் மற்றும் வசந்தி. யார் யார் பெயரில் எவ்வளவு விஸ்தீரணம் என்றால் ரமேஷ் பெயரில் 6 ஏக்கர், வசந்தி பெயரில் 1 1/2 ஏக்கர், எனது பெயரில் 60 செண்ட்.

2. தாவா சொத்து எங்களுக்கு எப்படி கிடைத்தது என்றால் நாங்கள் சி.கே.சண்முகத்தின் வாரிசுகள். அவரது பெயரில் பட்டா இல்லை. சி.கே.சண்முகத்திறக்கு எப்படி சொத்து கிடைத்தது என்றால் அவரது தாயார் வழக்கு தாக்கல் செய்து சொத்தினை பெற்றார். அந்த வழக்கின் ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்தேன். நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)